முதன்மை மாவட்ட நீதிமன்றம், காஞ்சிபுரம்

| | | | | |
|---|---|---|---|---|
| வழக்கு எண் | L.A.O.P | 86 | of | 2024 |

2026–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19 –ம் நாளான இன்று

கோருரிமைதாரர் தரப்பில் சாட்சியின் வாக்குமூலமானது 1873–ம் ஆண்டின் 10வது வட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திருமதி.Logeshwari, Translator, என்பவரால் சட்டத்தின் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | சிவராஜன் |
| தந்தை பெயர் | நடராஜன் |
| கிராமம் | |
| தொழில் | |
| வயது | 58 |

நாள் 19 .02.2026 – கோ.ம.சா.1 (CW1)

**முதல் விசாரணை**

நான் எனது தரப்பில் முதல் விசாரணக்கான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கோ.ம.சா.ஆ.1 முதல் கோ.ம.சா.ஆ. 3 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை**

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் நான் சொத்தை எப்போது வாங்கினேன் என்ற விவரம் கூறியுள்ளேன் என்றால் கூறவில்லை. நில ஆர்ஜிதம் செய்வதற்கான அறிவிப்பு வருவதற்கு சில நாட்களுக்கு முன்பு தான் நான் மேற்படி சொத்தை வாங்கினேனா என்றால் இல்லை. நான் வாங்கும் போது மேற்படி நிலம் விவசாய பயன்பாட்டில் இருந்தது என்றால் இல்லை. அது வீட்டு மனையாக இருந்தது. அதற்கான ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை ஆனால் அது அப்ரூவ செய்யப்பட்ட வீட்டுமனை நிலமாகும். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் இரண்டாம் பக்கத்தில் 0.7.43 ஏர்ஸ் நிலம் சொந்தமானது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய நிலத்தை எப்போது அரசாங்கம் ஆர்ஜிதம் செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் தோராயமாக 1995 எடுத்தார்கள். குறிப்பிட்ட தேதி ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். என்னுடைய இடத்திற்கு சதுர அடிக்கு ரூபாய் 66 என்று நிர்ணயம் செய்து இழப்பீடு வழங்கினார்கள் என்றால் சரிதான். அதற்குரிய இதர பலன்களும் சேர்ந்து எனக்கு வழங்கப்பட்டது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் இருங்காட்டுக்கோட்டை ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் நிறுவனங்கள் தொழிற்சாலைகள் கல்லூரி ஸ்தாபனங்கள் மத்திய அரசு, மாநில அரசு அலுவலகங்கள் ஆகியவை இருப்பதாக நான் கூறியுள்ளேன் எனறும், அது இருங்காட்டுக்கோட்டை மற்றும் ஸ்ரீபெரும்புதூரில் தான் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. அது பண்ருட்டியை சுற்றுவட்டாரத்தில் உள்ளது. எனக்கு சொந்தமான பண்ருட்டி கிராமத்தில் என்ன நிறுவனங்கள் அமைந்துள்ளது என்ற விவரங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சுற்றுவட்டாரத்தில் இருப்பதாக நான் கூறியுள்ளேன். பண்ருட்டி கிராமம் என்பது

வாலாஜாபாத்– ஒரகடம் மார்க்கத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். பண்ருட்டி கிராமத்திற்கும் திருப்பெரும்புதூர் இருங்காட்டு கோட்டைக்கும் சுமார் 25 30 கிலோமீட்டர் உள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. ஆனால் 20 கிலோமீட்டர் இருக்கும். சாட்சி தற்போது பத்து கிலோமீட்டர் தூரம் தான் இருக்கும் என்று சொல்கிறார். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சதுர அடிக்கு ரூபாய் 3000 கணக்கிட்டு இருக்க வேண்டும் என்று நான் கூறுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. சந்தை மதிப்பின் அடிப்படையில் கூறியுள்ளேன். சந்தை மதிப்பு ரூபாய் 3000 என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் அதிகபட்ச மதிப்பை ரூபாய் 300 தான் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் அவ்வாறு இருந்தது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் நிலம் எடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் இல்லை என்றால் சரிதான். தற்போது சாட்சி ஆவணங்கள் சரியானது என்று சொல்கிறார். என்னுடைய பிராமண வாக்கு மூலத்தில் சதுர அடிக்கு எவ்வளவு தொகை கேட்கிறேன் என்பதை குறிப்பிட்டு கூறியுள்ளேன்னா என்றால் இல்லை. ஆனால் கோரிக்கை மனுவில் கூறியுள்ளேன். நான் கோரும் அளவிற்கு இழப்பீடு வழங்குவதற்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றும் எனக்கு அளிக்கப்பட்ட இழப்பீடு முறையான ஆவணங்கள் மற்றும் சரியான வழிகாட்டுதல் படியும் சந்தை மதிப்புடன் கூடிய இதர பயன்கள் உடன் இழப்பீடு அளிக்கப்பட்டுள்ளதால் நான் கோரும் அதிகமான இழப்பீடை அளிப்பதற்கு தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மேற்படி குறுக்கு விசாரணை இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்று கொள்ளப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை**

(Sd/- Deepthi Arivunithi, M.L.,)
Principal District Judge,
Kancheepuram.